26th March 1959]

**SRI S. M. ANNAMALAI** : சென்னை நகரத்திலுள்ள பஸ்களை சர்க்கார் எடுத்துக் கொண்டதன் காரணமாக கார்பரேஷனுக்கு வருவாய் குறைந்திருக்கிறது. இந்த பஸ்களை கார்பரேஷனுக்கு கொடுப்பதற்காகிலும் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

**MR. SPEAKER** : இந்தக் கேள்வி "லோனைப்" பற்றியது. பஸ்களைப்பற்றி எப்படி கேட்க முடியும் ?

SRI A. A. RASHEED : Will the Government at least consider the question of increasing the amount of grants to the Corporation?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : An *ad hoc* grant of Rs. 15 lakhs was given.

*Conversion of Coimbatore Municipality into Corporation*

* 1012 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to convert the Coimbatore Municipality into a Corporation; and

(*b*) if so, when?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED : Sir, will the Government at least reconsider their decision to convert Coimbatore and Madurai into Corporation? Is the Hon. Minister aware that in Uttar Pradesh there are four Corporations whereas in Madras, there is only one Corporation?

MR. SPEAKER : How can the hon. Member compare this State with some other State? Let him confine his question to Madras State.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : We are not considering that question now.

**SRI P. G. MANICKAM** : கோயமுத்தூர் முனிசிபாலிடியை கார்பரேஷனாக மாற்றுவது பற்றி சர்க்காரில் ஏதாவது பரிசீலனை செய்யப்பட்டதா ? கார்பரேஷன் ஆக்குவதற்குரிய சகல தகுதிகளும் அந்த முனிசிபாலிடிக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON** : அதை பரிசீலனையில் எடுக்கவில்லை.

**SRI N. MARUDACHALAM** : கோவை நகரசபையுடன் பீளமேடு பஞ்சாயத்து போர்டைச் சேர்த்து, அதை கார்பரேஷன் ஆக்க வேண்டும் என்று கோவை நகரசபை தீர்மானம் அனுப்பியிருக்கிறதா ? அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON** : நகரசபைகளை கார்பரேஷன் ஆக்கும் ஒரு திட்டம் பரிசீலனைக்கு எடுக்கப்படும்பொழுது, இவ்விதமான ஆலோசனைகளையும் கவனிக்கலாம்.